Registrar of News Paper for India Regn. No. 15261/2005 (R.Dis no.1834/04)



CVPA NEWS
A Monthly Newspaper (Tamil & English) for Video & Photographic Professionals
AN OFFICIAL NEWS MAGAZINE FROM CHENNAI VIDEO & PHOTOGRAPHER'S ASSOCIATION
Film - 19 Click - 11
FEBRUARY 2024 Re. 1

சங்க அலுவலகத்தில் மார்ச் மாதத்திற்கான ரினிவல் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. தவறாமல் தொடர்ந்து ரினிவல் செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறது.

- CVPA

# CVPA உறுப்பினர்கள் நலவாரியத்தில் பதிவு செய்து கொள்ளவும்



சில ஆண்டுகளுக்கு முன்பு தமிழக அரசு நம் தொழில் சார்ந்த கலைஞர்களை உடல் உழைப்பு தொழிலாளர்களாக அங்கீகரித்து, தொழிலாளர் நலத்துறையின் கீழ் நல வாரியம் அமைத்துக் கொடுத்தது . அரசு அமைத்து கொடுத்த நல வாரியத்தில் நம்மில் பலர் அதில் உறுப்பினராக சேராமல் தவிர்த்து வந்தனர். இதற்கு பல காரணங்கள் சொன்னாலும், கொரோனா காலத்தில் அரசு அமைத்துக் கொடுத்த நலவாரியத்தின் முக்கியத்துவம் குறித்து சங்க உறுப்பினர்களிடையே ஏற்பட்ட விழிப்புணர்வு காரணமாக, நமது கலைஞர்களில் பலர் இந்த நல வாரியத்தில் இணைய விருப்பம் தெரிவித்து வந்தனர் . அனைவரின் கோரிக்கையை ஏற்று, ஏற்கனவே தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு செய்யப்பட்ட நமது மாநில சங்கத்தின் மூலமாக இதை செயல்படுத்த திட்டமிட்டோம். நமது சங்க செயற்குழுவில், தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு செய்யப்பட்ட மாநில சங்கத்தின் சென்னை பிரதிநிதியாக நமது சங்க தலைவர் செல். செல்வம் அவர்களை நியமித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதன் அடிப்படையில் மாநில அமைப்பாளர் சரவணன் அவர்கள், மண்டலம் ஒன்றின் மண்டல செயலாளர் கவுஸ் பாஷா அவர்கள் மூலமாக மாநில சங்கத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டு, மாநில தலைவர் சிவகுமார் அவர்கள் சென்னைக்கு வந்தார். அவர் முன்னிலையில் தொழிலாளர் நல உதவி ஆணையர் அலுவலகத்தில் ஆணையர் முன்னிலையில், தொழிலாளர் நல வாரியத்தின் மாநில சங்க சென்னை பிரதிநிதியாக செல். செல்வம் அவர்களின் பெயர் பதிவு செய்யப்பட்டது. அப்போது மாநில சங்க அமைப்பாளர் சரவணன், மண்டல செயலாளர் கவுஸ் பாஷா , சென்னை மாவட்ட செயலாளர் பிரேம்குமார், இணைச் செயலாளர் தனகோட்டி, பகுதி செயலாளர் திலீப் ஆகியோர் உடன் இருந்தார்கள். இதன் மூலமாக நல வாரியத்தில் இணைய விருப்பம் உள்ள நமது சங்க உறுப்பினர்களை படிப்படியாக இணைக்கும் பணி தொடங்கும், இவர்களுக்கு அரசு தரும் நலத்திட்ட உதவிகளை நல வாரியத்தின் மூலம் பெற்றுத்தர இருக்கிறோம். இந்த நல வாரியத்தில் இணைய விருப்பமுள்ள நமது சங்க உறுப்பினர்கள் தங்கள் பெயர்களை சங்க அலுவலகத்தில் அல்லது உங்கள் பகுதி துணைத்தலைவர், இணைச்செயலாளர், பகுதி செயலாளர் ஆகியோரிடம் கொடுக்கப்பட்டுள்ள விண்ணப்ப படிவத்தை பூர்த்தி செய்து பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

### பதிவு பெற்ற புதுப்பித்தலில் உள்ள தொழிலாளர்களுக்கான நலத்திட்ட உதவி விபரம்

| | |
|---|---|
| விபத்து மரண உதவித்தொகை | ரூ.1,25,000 |
| இயற்கை மரண உதவித்தொகை | ரூ.30,000 |
| ஈமச்சடங்கு உதவித்தொகை | ரூ.5,000 |
| **கல்வி உதவித்தொகை** | |
| 8ம் வகுப்பு முதல் 9ம் வகுப்பு வரை (இரு பாலருக்கும் ஆண்டுதோறும்) | ரூ.1000 |
| 10ம் வகுப்பு பயில ( பெண் குழந்தைகளுக்கு மட்டும்) | ரூ.1000 |
| 10ம் வகுப்பு தேர்ச்சி (இருபாலரும்) | ரூ.1000 |
| 11ம் வகுப்பு பயில (பெண் குழந்தைகளுக்கு மட்டும்) | ரூ.1000 |
| 12ம் வகுப்பு பயில (பெண் குழந்தைகளுக்கு மட்டும்) | ரூ.1500 |
| 12ம் வகுப்பு தேர்ச்சி (இருபாலரும்) | ரூ.1500 |
| முழுமையான இளநிலை பட்டப்படிப்பு விடுதியுடன் | ரூ.1500+1750 |
| முறையான முதுநிலை பட்டப்படிப்பு விடுதியுடன் | ரூ.4000+5000 |
| முறையான முதுநிலை பட்டப்படிப்பு விடுதியுடன் | ரூ.4000+6000 |
| முறையான இளநிலை தொழில் நுட்ப கல்வி விடுதியுடன் | ரூ.6000 + ரூ.8000 |
| தொழிற்பயிற்சி பள்ளி/ தொழில்நுட்ப கல்வி | ரூ.1000 + ரூ.1200 |
| **திருமண உதவித்தொகை** | |
| ஆண் | ரூ.3000 |
| பெண் | ரூ.5000 |
| மகப்பேறு உதவித்தொகை இரு தவணைகளில் | ரூ.6000 |
| கரு கலைப்பு/ கருச்சிதைவு | ரூ.3000 |
| கண் கண்ணாடி உதவித்தொகை | ரூ.500 |
| ஓய்வூதிய உதவித்தொகை மாதம்தோறும் | ரூ.1000 |







# CVPA கிரிக்கெட் போட்டி

நமது சங்க உறுப்பினர்கள் அனைவருக்கும் வணக்கம்!

நமது சங்க உறுப்பினர் அம்பாள் வீடியோ நாகராஜ் மற்றும் கோனிகா வீடியோ சுரேந்தர் ஆகியோரின் மறைவு நமது சங்கத்திற்கு ஈடு செய்ய முடியாத ஒரு பேரிழப்பாகும். இவர்களை பிரிந்து வாடும் அவர்களது குடும்பத்தாருக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறோம். நமது சங்க நிர்வாகிகள் அம்பாள் வீடியோ நாகராஜ் அவர்களுக்கு இறுதி அஞ்சலி செலுத்திய பின், நமது சங்க உறுப்பினர்களின் குடும்பத்திற்கு பொதுக்குழு தீர்மானபடி வழங்கப்படும் ஈமச்ச டங்கு தொகை 30 ஆயிரம் ரூபாய் அம்பாள் வீடியோ நாகராஜனின் வாரிசுதாரர்களிடம் வழங்கப்பட்டது . கோனிகா வீடியோ சுரேந்தர் அவர்களின் இறுதிச் சடங்கு வடமாநிலத்தில் நடைபெற்றதால், அன்னாரின் இறுதி அஞ்சலி நிகழ்ச்சியில் சங்க நிர்வாகிகள் யாரும் கலந்து கொள்ளாதது எங்களுக்கு வருத்தம் அளிக்கிறது . இவரது குடும்பத்தார் சென்னை திரும்பியதும் ஈமச்சடங்கு தொகை அவருடைய வாரிசு தாரர்களிடம் வழங்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம் .

நமது சங்க உறுப்பினர்களாகிய உங்கள் பிள்ளைகள், நடப்பு ஆண்டிற்கான பொது தேர்வை நம்பிக்கையுடன் எழுதவும், நல்ல மதிப்பெண் பெற்று தேர்ச்சி பெறவும் நமது சங்கம் சார்பாக வாழ்த்துகின்றோம்.

நமது சங்கத்தின் பொதுக்குழு தீர்மானத்திற்கு மதிப்பளித்து, ஆயிரத்திற்கும் மேற்பட்ட சங்க உறுப்பினர்கள் தங்கள் அடையாள அட்டையை ரெனிவல் செய்திருப்பதைக் கண்டு மிகவும் மகிழ்ச்சி அடைகின்றோம். இனி வரும் மார்ச் மாதத்தில் 163 உறுப்பினர்களும், ஜூன் மாதத்தில் 170 உறுப்பினர்களும், செப்டம்பர் மாதத்தில் 360 உறுப்பினர்களும், டிசம்பர் மாதத்தில் 554 உறுப்பினர்களும் முழுமையாக ரினிவல் செய்வார்கள் என்று நம்புகிறோம். உறுப்பினர்களாகிய நீங்கள் உங்கள் அடையாள அட்டையை எப்போதும் புதுப்பித்து வைத்து கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

நமது சங்கத்தின் வேண்டுகோளை ஏற்று வரும் மார்ச் மாதம் இரண்டு வகுப்புகளும், ஜூன் மாதத்தில் இரண்டு பயிற்சி வகுப்புகளும் ஆக மொத்தம் கேனான் நிறுவனம் சார்பில், நான்கு ஒர்க்ஷாப் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இந்த ஒர்க் ஷாப்பில் கேனான் நிறுவனத்தின் மிரர் லஸ் கேமராவின் அட்வான்ஸ் தொழில்நுட்ப பயிற்சி வகுப்பு நடத்துவது குறித்து இதற்கான பேச்சு வார்த்தை இம்மாதம் இரண்டாம் தேதி நமது சங்க அலுவலகத்தில் இந்த பேச்சுவார்த்தையில் கேனான் இந்தியா நிறுவனத்தின் சார்பாக சென்னை அலுவலகத்தின் மேலாளர் ஜான் செல்வராஜ் அவர்கள் கலந்து கொண்டார். இவர் கொடுத்த ஒப்புதலுக்குப் பின், நிர்வாக குழு மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் கலந்து ஆலோசித்த பிறகு நான்கு ஒர்க் ஷாப் நடத்த தேதி உறுதி செய்யப் பட்டு கேனான் நிறுவனத்தினரிடம் தெரிவிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து வடசென்னை பகுதிக்கு மார்ச் 12ஆம் தேதியும் மற்றும் எஸ்-2 பகுதிக்கு மார்ச் 21 ஆம் தேதியும் கேனான் நிறுவனம் ஒர்க் ஷாப் நடத்த திட்டமிட்டுள்ளது .

இது கேனான் யூசர் களுக்கு மிகவும் பயனுள்ள ஒரு பயிற்சி வகுப்பாக இருக்கும் என்று நம்புகிறோம். ஒவ்வொரு பயிற்சி வகுப்பிற்கும் 60 முதல் 75 உறுப்பினர்கள் மட்டுமே முன்பதிவு செய்து வகுப்பில் கலந்து கொள்ள வேண்டும் .இதனைத் தொடர்ந்து வரும் ஜூன் மாதத்தில் மத்திய சென்னை உறுப்பினர்களுக்கும், எஸ் 1 ன் பகுதி உறுப்பினர்களுக்கும் கேனான் பயிற்சி வகுப்புகள் நடைபெறும் தேதி இடம் ஆகியவை பின்னர் அறிவிக்கப்படும்.

கிரிக்கெட் விளையாட்டில் ஆர்வமுள்ள நமது சங்க உறுப்பினர்களுக்காக நடத்தப்படும் CVPA கிரிக்கெட் போட்டி, அடுத்த மாதம் நடத்த இருக்கிறோம். தேதி பின்னர் அறிவிக்கப்படும். போட்டியில் கலந்து கொள்ள இருக்கும் அணிகள் தங்கள் அணியை இப்போதே தயார்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தமிழக அரசு நம் தொழில் கலைஞர்களுக்காக சில ஆண்டு களுக்கு முன்பு அமைத்து கொடுத்த நல வாரியத்தில் நம்மில் பலர் சேராமல் தவிர்த்து வந்தோம். இதற்கு நாம் பல காரணங்கள் சொன்னாலும், கொரோனா காலத்தில் இந்த நலவாரியத்தின் முக்கியத்துவம் குறித்து சங்க உறுப்பினர்களிடையே ஏற்பட்ட விழிப்புணர்வு காரணமாக, நமது கலைஞர்களில் பலர் இந்த நல வாரியத்தில் இணைய விருப்பம் தெரிவித்து வந்தனர். அனைவரின் கோரிக்கையை ஏற்று, ஏற்கனவே தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு செய்யப்பட்ட நமது மாநில சங்கத்தின் மூலமாக இதை செயல்படுத்த திட்டமிட்டோம். நமது சங்க செயற்குழுவில், தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு செய்யப்பட்ட மாநில சங்கத்தின் சென்னை பிரதிநிதியாக நமது சங்க தலைவர் செல். செல்வம் அவர்களை நியமித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதன் அடிப்படையில் மாநில அமைப்பாளர் சரவணன் அவர்கள், மண்டலம் ஒன்றின் மண்டல செயலாளர் கவுஸ் பாஷா அவர்கள் மூலமாக மாநில சங்கத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டு, மாநில தலைவர் சிவகுமார் அவர்கள் சென்னைக்கு வந்தார். அவர் முன்னிலையில் தொழிலாளர் நல உதவி ஆணையர் அலுவலகத்தில் ஆணையர் முன்னிலையில், தொழிலாளர் நல வாரியத்தின் மாநில சங்க சென்னை பிரதிநிதியாக செல். செல்வம் அவர்களின் பெயர் பதிவு செய்யப்பட்டது. அப்போது மாநில சங்க அமைப்பாளர் சரவணன், மண்டல செயலாளர் கவுஸ் பாஷா, சென்னை மாவட்ட செயலாளர் பிரேம்குமார், இணைச் செயலாளர் தனகோட்டி, பகுதி செயலாளர் திலீப் ஆகியோர் உடன் இருந்தார்கள். இதன் மூலமாக நல வாரியத்தில் இனைய விருப்பம் உள்ள நமது சங்க உறுப்பினர்களை படிப்படியாக இணைக்கும் பணி தொடங்கும், இவர்களுக்கு அரசு தரும் நலத்திட்ட உதவிகளை நல வாரியத்தின் மூலம் பெற்றுத்தர இருக்கிறோம். இந்த நல வாரியத்தில் இனைய விருப்பமுள்ள நமது சங்க உறுப்பினர்கள் தங்கள் பெயர்களை சங்க அலுவலகத்தில் அல்லது உங்கள் பகுதி துணைத்தலைவர், இணைச்செயலாளர், பகுதி செயலாளர் ஆகியோரிடம் கொடுக்கப்பட்டுள்ள விண்ணப்ப படிவத்தை பூர்த்தி செய்து பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

CVPA அறக்கட்டளையை திருத்தி அமைக்கும் பணி இறுதி கட்டத்தை எட்டி உள்ளது ,என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். இனி வரும் காலங்களில் சங்க உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் நலத்திட்ட உதவிகள் CVPA அறக்கட்டளை மூலமாகவே வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். உறுதியான அறிவிப்பு விரைவில் வெளியாகும். அதன் பிறகு இந்த அறக்கட்டளையில் இணைய விருப்பம் உள்ளவர்கள் பத்தாயிரம் ரூபாய் செலுத்தி அறக்கட்டளை உறுப்பினராக உங்களை இணைத்துக் கொள்ளலாம்.

## கேனான் மிரர்லஸ் அட்வான்ஸ் ஒர்க் ஷாப்

நமது சங்கத்தின் வேண்டுகோளை ஏற்று , கேனான் நிறுவனத்தின் சார்பில் மிரர்லஸ் கேமரா குறித்து அட்வான்ஸ் தொழில்நுட்ப பயிற்சி வகுப்பு நடத்த திட்டமிடப்பட்டுள்ளது இது குறித்து ஆலோசனை நடத்த இம்மாதம் இரண்டாம் தேதி நமது சங்க அலுவலகத்தில் கேனான் இந்தியா நிறுவனத்தின் சார்பாக சென்னை அலுவலகத்தின் மேலாளர் ஜான் செல்வராஜ் அவர்கள் கலந்து கொண்டார் இவர் அளித்த ஒப்புதலுக்குப் பின் , நமது சங்கத்தின் நிர்வாக குழு மற்றும் செயற்குழு உறுப்பினர்களிடம் கலந்து ஆலோசித்த பிறகு, மார்ச் 12 ஆம் தேதி வட சென்னை பகுதியிலும் , மார்ச் 21ஆம் தேதி தென் சென்னை எஸ்2 பகுதியிலும் ஜூன் மாதத்தில் மத்திய சென்னை பகுதி மற்றும் தென் சென்னை எஸ்1 பகுதியென ஆக மொத்தம் நான்கு ஒர்க் ஷாப் நடத்தி கொடுக்க கேனான் நிறுவனம் உறுதி செய்துள்ளது. மிகவும் பயனுள்ள இந்த பயிற்சி வகுப்பில் சங்க உறுப்பினர்கள் கலந்துகொண்டு பயனடையுமாறு உங்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறோம். ஒவ்வொரு பயிற்சி வகுப்பிற்கும் 60 முதல் 75 உறுப்பினர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள். எனவே முன்பதிவு செய்து இந்த பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டு பயனடையுமாறு கேட்டுக் கொள்கிறோம்.








தேனாம்பேட்டை பகுதியை சேர்ந்த நமது சங்க உறுப்பினர் வெங்கடேசன் அவர்களின் மகன் சரத்குமார்- சரண்யா இவர்களின் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் நமது சங்கத்தின் இந்நாள் மற்றும் முன்னாள் சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்கள்.



மத்திய சென்னை பகுதியை சேர்ந்த நமது சங்க உறுப்பினர் பார்த்தசாரதி அவர்களின் மகள் விஜயலட்சுமி- ஹரி கோபி கிருஷ்ணா இவர்களின் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் நமது சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்கள்.



வடசென்னை பகுதியை சேர்ந்த நமது சங்க உறுப்பினர் ஜெயசங்கர் அவர்களின் மகன் தேஜாஸ்ரீ - பிரதீப் இவர்களின் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் நமது சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்கள்.



நமது சங்கத்தின் பல்லாவரம் பகுதியின் முன்னாள் பகுதி செயலாளர் முரளி அவர்களின் மகனும் நமது சங்க உறுப்பினராகிய தாமோதரன் - திவ்யா இவர்களின் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் இந்நாள் மற்றும் முன்னாள் சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்கள்.



பல்லாவரம் பகுதியைச் சேர்ந்த நமது சங்க உறுப்பினர் செந்தில் அவர்களின் மகள் செந்தமிழ்ச்செல்வி- கார்த்திக் இவர்களின் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் நமது சங்கத்தின் முன்னாள் இந்நாள் நிர்வாகிகள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்கள்.



வடசென்னை பகுதியின் நமது சங்க உறுப்பினர் திரு .கோடீஸ்வரன் அவர்கள் திருவொற்றியூர் பகுதியில் புதியதாக தொடங்கி இருக்கும் போட்டோ ஸ்டுடியோவிற்கு நமது சங்கத்தின் முன்னாள் இந்நாள் நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள், மற்றும் சங்க உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.




அனைவருக்கும் வணக்கம்...

வேலைக்காரன் குழு மற்றும் CVPA இணைந்து நடத்திய 7 பேட்ச்சில் பெண்களின் திறன் மேம்பாட்டிற்காக இலவச லைட்ரூம் மற்றும் போட்டோஷாப் பயிற்சி டிசைனிங் துறையில் வர விரும்புக்றவர்களுக்கான ஒரு அரிய வாய்ப்பு இலவச கற்றல் பயிற்சி...

2024 லைட்ரூம் மற்றும் ஃபோட்டோஷாப் காலை நேர ஆன்லைன் வகுப்பில் 35 பெண்கள் கலந்து கொண்டு பயன் பெற்றார்கள். நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்களுக்கு நமது சங்கம் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். இதுபோலவே ஆண்களுக்கும் ஆன்லைன் காலை நேர பயிற்சி வகுப்பு விரைவில் அறிவிக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

கீழே கொடுக்கப்பட்டுள்ள லிங்கில் தங்கள் விவரத்தை பூர்த்தி செய்து அனுப்பவும்

https://forms.gle/FT3CLdVExpYTwfB98

## மருத்துவ உதவி 5000 ரூபாய் பெற்றுக் கொண்ட சங்க உறுப்பினர்கள்

தொடர்ந்து ரினிவலில் இருக்கும் நமது சங்க உறுப்பினர்கள் விபத்தில் காயம் அடைய நேரிட்டால், நமது சங்க உறுப்பினர்களுக்கு மருத்துவ சிகிச்சை செய்து கொள்ள அவர்களுக்கு ஐந்தாயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது.

இந்த வகையில் திருவொற்றியூர் பகுதியை சேர்ந்த நமது சங்க உறுப்பினர் குமார் அவர்களுக்கும், ஆதம்பாக்கம் பகுதியைச் சேர்ந்த ஆதம்பாக்கம் பகுதி செயலாளர் சுரேஷ் அவர்களுக்கும், நமது சங்கத்தின் வடசென்னை பகுதியை சேர்ந்த முன்னாள் ராயபுரம் பகுதி செயலாளரும், ஆயுட்கால உறுப்பினராகிய உசேன் அவர்களுக்கும் மருத்துவ சிகிச்சை செய்து கொள்ள மூவருக்கும் 5 ஆயிரம் ரூபாய் நமது சங்கம் சார்பாக வழங்கப்பட்டது.

## அப்போலோ மருத்துவமனையுடன் CVPA புரிந்துணர்வு ஒப்பந்தம்



அப்போலோ மருத்துவமனை நமது குடும்ப விழாவில் அறிவித்தபடி, இங்கு சிகிச்சை பெற்றுக் கொள்ள விரும்பும் உறுப்பினர்களுக்கு சிகிச்சை கட்டணத்தில் சலுகைகள் வழங்கப்படும் என்று அறிவித்தது. அதன் அடிப்படையில் நமது சங்கச் செயலாளர் இதற்கான ஒப்பந்தத்தை கையெழுத்திட்டு பெற்றுக் கொண்டார். பிஆர்ஓ ரவிக்குமார், இணைச்செயலாளர் கோட்டி, பகுதி செயலாளர் சீனிவாசன், ஆகியோர் உடன் இருந்தார்கள்.

## வருந்துகிறோம்



நமது சங்கத்தின் மேற்கு மாம்பலம் பகுதியை சேர்ந்த ஆயுட்கால உறுப்பினர் CONICA VIDEO உரிமையாளர் திரு.M.சுரேந்தர் அவர்கள் இயற்கை எய்தினார் என்பதனை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். அவரை இழந்து வாடும் அவர்கள் குடும்பத்திற்கு CVPA சார்பாக ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறோம். அன்னாரது ஆத்மா சாந்தி அடைய இறைவனை பிரார்த்திக்கிறோம். இவரது இறுதிச் சடங்கு அவரது சொந்த ஊரான ஜோத்பூர் ராஜஸ்தான் மாநிலத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டதால் ச ங்க நிர்வாகிகள் அவரது இறுதிச் சடங்கு கலந்து கொள்ள முடியவில்லை. இவரது குடும்பத்தினர் சென்னை திரும்பியதும், மறைந்த உறுப்பினர்களுக்காக நமது சங்கம் சார்பாக வழங்கப்படும் ஈமச்சடங்கு தொகை ரூபாய் 30,000 அவருடைய வாரிசுதாரர்களிடம் வழங்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

## வருந்துகிறோம்

நமது CVPA சங்கத்தின் தென் சென்னை முன்னாள் துணைத் தலைவர் அம்பாள் வீடியோஸ் நாகராஜன் அவர்கள் 05-02-2024 அன்று இறைவனடி சேர்ந்தார் என்பதனை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். CVPA சார்பாக ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறோம் அன்னாரது ஆத்மா சாந்தி அடைய இறைவனை பிரார்த்திக்கிறோம். இறுதிச் சடங்கு அவருடைய சொந்த ஊரில் நடைபெற்றதால், குரோம்பேட்டை அரசு மருத்துவமனையில் இருந்த அவரது உடலுக்கு சங்க நிர்வாகிகள் அஞ்சலி செலுத்தினார்கள். நமது பொதுக்குழு தீர்மானபடி சங்க உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் ஈமசடங்கு தொகை ரூபாய் 30,000 அவருடைய வாரிசுதாரர்களிடம் வழங்கப்பட்டது.



**CVPA NEWS** (Tamil & English ) Monthly Newspaper, **RNI No. TNBIL / 2005 / 15261 (R.Dis no.1834/04)**
Published by **B.SRIDAR,** on behalf of
**Chennai Video & Photographers' Association,**
at 51/24, Bangaru Street, Ellis Road, Chennai-2. Ph: 2860 7821 Email : cvpanews2005@gmail.com, Website : www.cvpa.in
Printed by **M.NAVANEETHAN,** at **Nava Jothi Achagam,** No.8. Mukhtharunnissa Begum St, Ellis road, Chennai-2.
Editor : **B.SRIDAR,** Mobile: 8015170351